**கெகிராவை பிரதேச சபை**
**அநுராதபுரம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கெகிராவை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சபையின் வீதி பராமரிப்பிற்காக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத ஹியும் குழாய்களின் பெறுமதியான ரூபா 729,000 தொகை செலவினமாக கணக்கீடு செய்த காரணத்தினால் ஆண்டின் செலவினம் கூடுதலாகவும் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 100,742 தொகையான நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யாத காரணத்தினால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிக்கும் கணக்கு அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 142,137 தொகையான எஞ்சிய நுகர்வுப்பொருள் இருப்பு கணக்கீடு செய்யாத காரணத்தினால் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிலுவை வாடகை பெறுவனவு ரூபா 27,300 தொகை நிலுவை வீதவரிக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட காரணத்தினால் நிலுவை வீதவரி அப்பெறுமதியால் குறைத்தும் நிலுவை வாடகை அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் காணப்பட்ட ரூபா 20,888,410 தொகையான நிர்மாண கடன்பட்டோர் மீதியில் 03 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 347,913 ஆன மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிவல்லை.

#### 1.3.3 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை

ரூபா 4,420,124 தொகையான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுக்குரிய விரிவான அட்டணைகள் மற்றும் பௌதீக ரீதியாக அச்சொத்துக்கள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 19,998,377 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 22,904,154 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

சபைக்குச் சொந்தமான ரூபா 21,853,887 தொகையான பணத்தை முதலீடு செய்வதற்கு அல்லது செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 2017 இல் பட்டியலிடப்பட்ட வருமானம் | 2017 இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2017 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பெறுமதி | 2017.01.01 மீதியில் பெறுகை பெறுமதி | 2017 பட்டியலிடப்பட்டது காசாக பெறுமதி | பெறுமதி |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| வீதவரியும் வரிகளும் | 2,335,656 | 5,197,631 | 1,043,554 | 4,379,557 | 2,110,176 |
| வியாபார நிர்மாண வரி | - | 2,028,223 | - | 2,028,223 | - |
| அறிவித்தல் பதாதை | - | 373,025 | - | 373,025 | - |
| நீதிமன்றத் தண்டப்பணம் | 48,426,193 | 15,271,516 | - | - | 63,697,709 |
| முத்திரைக் கட்டணங்கள் | 6,466,529 | 600,000 | - | - | 7,066,529 |
| அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | - | 3,451,363 | - | 3,451,363 | - |
| சுற்றாடல் அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | - | 283,360 | - | 283,360 | - |
| சேவைகளுக்கான கட்டணங்கள் | - | 771,393 | - | 771,393 | - |
| கடை வாடகை | 288,790 | 549,860 | 180,728 | 393,175 | 264,747 |
| குத்தகைக்கு வழங்கல் | 1,469,889 | 5,611,146 | 128,987 | 5,611,146 | 1,340,902 |
| சந்தை வரி | - | 608,760 | - | 608,760 | - |
| களியாட்ட வரி | 693,690 | 260,674 | 9,000 | 149,885 | 795,479 |
| மொத்தம் | 59,680,747 | 35,006,951 | 1,362,269 | 18,049,887 | 75,275,542 |

**2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

மீளாய்வாண்டின் ஆரம்பத்திலான ரூபா 59,680,746 ஆன நிலுவை வருமானத்தில் ரூபா 1,362,268 தொகையான மாத்திரம் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிலுவை வருமானம் ரூபா 75,275,543 வரை அதிகரித்திருந்தது.

**2.3.3 வீத வரியும் வரிகளும்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2004 ஆம் ஆண்டின் போது 4,861 வீதவரி அலகுகள் இனங்காணப்பட்டு வீதவரியாக ரூபா 5,197,6331 பட்டியலிடப்பட்டிருந்ததுடன் 2004 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கட்டணங்கள் நாளதுவரையாக்கப்படாதிருந்தமையால் சபை அறவிடக்கூடியதாக இருந்த பாரியளவு வரி வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலான ரூபா 2,335,656 தொகையான நிலுவை வீதவரிகளிலிருந்து ஆண்டில் ரூபா 1,043,554 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் நிலுவை வீதவரி அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலான ரூபா 1,758,678 தொகையான நிலுவை கடை வாடகை மற்றும் நிலுவை வாடகை வருமானத்திலிருந்து ரூபா 309,714 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் மிகுதியை அறவிடுவதற்கு பிரதேச சபை சட்டத்தின் 159 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 549,860 ஆன பட்டியலிடப்பட்ட நிலுவை வருமானத்திலிருந்து ரூபா 393,175 சேகரிக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கைகளில் நிபந்தனைகள் உள்ளடக்கப்படாதிருநதன் காரணமாக மிகுதி நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் கிடைக்க வேண்டியதாக காணப்பட்ட ரூபா 48,426,193 ஆன நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 6,466,528 முத்திரைக் கட்டணத்திலிருந்து எவ்வித தொகையும் சபைக்கு கிடைக்காமல் இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 7,066,528 தொகையும் நீதிமன்ற தண்டபணமாக ரூபா 63,697,709 தொகை மாகாண சபையினால் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

-------------------------

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ் விடயங்களுக்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

------------------------------------------------

சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளுக்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) எதிர்பார்த்த நிறைவு மட்டத்தினை அடையாமை**

--------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டில் டெங்கு ஒழிப்பிற்காக 17 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 05 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**(ஈ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

---------------------------------------------------------

சபை அதிகாரப் பிரதேசத்தில் ஒன்று சேர்க்கப்படும் கழிவுப்பொருட்கள் அதிகாரப் பிரதேசத்தின் ஹபரன செவனகம மற்றும் எம்புல்கஸ்வெவ ஆகி ஆகிய இரண்டு இடங்களுக்கு வகைப்படுத்தப்படாமல் முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்தன.

**(உ) சுற்றாடல் சிக்கல்கள்**

---------------------------------

சபையின் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்கள் இரண்டு இடங்களில் முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்தமையால் பாரிய சுற்றாடல் சேதங்களும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் எரிப்பதினூடாக பாரிய வாயு மாசடைதலொன்றும் அக்கழிவுப்பொருட்களை உணவாகக் கொள்ளும் காட்டு யானைகளின் உயிர்களுக்கு ஆபத்தொன்று உள்ளதாகவும் அவதானிக்கப்பட்டது.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

---------------------------------------------------------------

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

-------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதிவுசெய்யப்படாத இரண்டு உழவு இயந்திரங்கள் மற்றும் இரண்டு நீர் பவுசர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் பண்முகப்படுத்தப்பட் நிதிஏற்பாட்டின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,185,177 பெறுமதியான பொருட்கள் மற்றும் 652 உபகரண விடயங்கள் 2018 யூலை 04 வரையிலும் நலனாலிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

--------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இஹல புளியங்குளம் ஆட்டிறைச்சிக் கடை ரூபா 106,450 இற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையின்

பிரகாரம் கொல்லுமிட வசதிகள் சபைக்கு வழங்கப்படாமையால் இறைச்சிக்கடை நடாத்தப்படவில்லை.

(ஆ) ஹபரண குள மீன் கூடத்தை ரூபா 26,000 இற்கு குத்தகைக்கு பெற்றுக்கொண்ட குத்தகையாளர் வியாபாரத்தை கொண்டு நடாத்தாமை தொடர்பாக நடவடிக்கை எடுக்காமல் ரூபா 8,700 தொகையான 1/3 வைப்பு வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் மீன் பலகையை மீண்டும் குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மடாட்டுகம மீன் கூடத்தை ரூபா 51,600 இற்கு குத்தகைக்கு பெற்ற குத்தகையாளர் 03 மாதங்கள் கடந்ததன் பின்னர் வியாபாரத்தை மேற்கொள்ள முடியாதென குறிப்பிட்டு ஆதனத்தை சபைக்கு வழங்கியிருந்ததுடன் இரண்டாவது கேள்விதாரரும் ஆதனத்தை பொறுப்பேற்பதை நிராகரித்திருந்தார். அதனை மீண்டும் குத்தகைக்கு வழங்குதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பண்டாரபொதான ஆட்டிறைச்சிக்கடைக்காக கொல்லுமிடம் நிர்மணிக்கப்படாமைால் ரூபா 975,450 இற்கு குத்தகைக்கு பெற்றுக்கொண்ட குத்தகையாளர் மாதந்த வாடகையான ரூபா 122,000 கொடுப்பனவு செய்ததன் பின்னர் வியாபாரத்தை மீண்டும் கையளித்தமையால் சபைக்கு ரூபா 853,450 ஆன வருமானம் இல்லாமல் போனது.

(உ) சபைக்குரிய கடையொன்றை குத்தகைக்கு எடுத்த குத்தகையாளர் ஒருவரால் கடையை அடுத்து பெரிய வீடொன்றை நிர்மாணித்து அதில் வசித்து வந்த போதிலும் அவ்வீட்டை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2016 திசெம்பர் 30 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2052 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த கட்டண அளவுகளுக்கு இணங்காத வகையில் 128 சந்தர்ப்பங்களில் ரூபா 338,60 அறவிடப்பட்டிருந்தன.

(எ) சபைக்குச் சொந்தமான ஹபரன நகரில் உள்ள 08 கடைகளில் 05 கடைகள் 2018 யூலை 10 அளவில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. குத்தகையாளருக்கு சபைக்குச் சொந்தமான ஆதனங்களை உப குத்தகைக்கு வழங்கி பாரியளவு வருமானமொன்றை அறவிடுவதற்காக சபை இடமளித்திருந்ததுடன் உப குத்தகை வழங்குதல் தடைசெய்யப்பட்டுள்ளதாக உடன்படிக்கையில் நிபந்தனையொன்று உள்ளடக்கப்படாமை காரணமாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்குள்ள இயலுமை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

## 3.54 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

சபையினால் பயன்படுத்தப்படுகின்ற பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டள்ள 31 ஏக்கர் 2 ரூட் 8 பேர்ச் பாரியளவிலான 24 காணித் துண்டுகளின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

2004 மற்றும் 2005 ஆண்டுகளின் போது ரூபா 2,500,000 செலவில் எம்புல்கஸ்வெவவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ தொகுதி மற்றும் 04 உயிரியல் தாங்கிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

## 3.5 பெறுகை செயற்பாடு

### 3.5.1 பெறுகை திட்டம்

மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 02 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே 77 சதவீதத்திலிருந்து 79 சதவீதம் வரையான விலகலொன்றும் 08 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கு ஒப்பாக உள்ளவாறான செலவினங்களுக்கு இடையில் 10 சதவீதம் முதல் 155 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டன.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

சபைக்கு பொறுப்பு கூறவேண்டிய உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பதில் அளிக்கப்படாத கணக்காய்வு விசாரணைகள்

2017 ஒக்தோபர் 13 ஆம் திகதிய NCP/AP/F/KKPS/FA/17/05 ஆம் இலக்க கணக்காய்வு விசாரணைக்கு 2018 யூலை வரையிலும் பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | முறைமையின் குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | இறுதி இருப்பு பௌதீக ரீதியில் கணக்கீடு செய்து கணக்கீடு செய்யப்படாமை |
| (ஆ) | கடைகள் மற்றும் ஆதனங்கள் குத்தகைக்கு வழங்குதல் | (i) கோவைகள் நாளதுவரையாக்கப்படாமை<br>(ii) மீண்டும் குத்தகைக்கு வழங்க நடவடிக்கை முடியாமை<br>(iii) உடன்படிக்கை மீறிய குத்தகையாளர் களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (இ) | நிலையான சொத்துக்கள் | (i) காணிகளின் உரித்தை கையேற்காமை<br>(ii) காணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தாமை. |
| (ஈ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | கழிவுப்பொருள் முகாமைத்துவம் செய்யப்படாமை |